உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

தென்றிருப்பதியாகிய சீர்காழிக்ஷேத்ரம்
ஸ்ரீ திருஞான சம்பந்த சுவாமிகளின் மரபிலெழுந்த
கண்ணுடையவள்ளலார் சுவாமிகளி னருட்பெற்றவரும்
"பூரணானந்தோதயம்" எனும் அரியஞான கிரந்த கர்த்தாவுமாகிய
மஹான் - சாங்குசித்த சிவலிங்க நாயனாரின்

குருதோத்திரப்புஞ்சம்.

இஃது
ஸ்ரீமத் - சிவப்பிரகாச தேசிக சுவாமிகளால்
தீக்ஷாநாமம் பெற்றவரும்,
சென்னை அமீர்நகர்
ம-ள-ள-ஸ்ரீ ச. பெருமாள் பிள்ளை யவர்கள் பிரதமப் புத்திரருமாகிய
ச. பெ. திருக்காமணிப் பிள்ளையென்று வழங்கும்
ஸ்ரீ சிவயோகானந்த தேசிகரா லியற்றி

—(*)—

சென்னை வேளாளத்தேவனாம்பேட்டை பீர்காரர்பதி
ம-ள-ள-ஸ்ரீ M இராத உபாத்தியாயர் நன்முயற்சியினாலும்
கையொப்பக்காரர்களி னுதவியாலும்,
சென்னை சேத்துப்பேடு
ஸ்ரீ ஜெய விநாயக சிவப்பிரகாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டு

—[]—

௨௪ - வது ௵த்தின் குருபூஜாதினமாகிய
கலியுகாப்தம் 5025 க்குச் சரியான தமிழ் ரக்தாக்ஷி ௵
னி ௴ 32௳ சதுர்த்தி திதி, மூலநட்சத்திரங்கூடிய
வாரத்தன்று ஷெ நாயனாரின் சன்னிதானத்தில்
ரகானந்த தேசிகரா லரங்கேற்றஞ்செய்யப்பட்டது.

1924 ௵ ஜூலை ௴ 15௳

—][—

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 NOV 1924
MADRAS

114

Q23:417
N24
183685

OFFICE OF THE ... 22 NOV 1924 MADRAS

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீஜ்ஞான சம்பந்த குருப்யோநம :

தென்திருப்பதியாகிய சீர்காழிவேந்தராம்
ஸ்ரீ திருஞான சம்பந்த சுவாமிகளின் மரபிலெழுந்த
கண்ணுடையவள்ளலார் சுவாமிகளி னருட்பெற்றவரும்
'பூரணானந்தோதயம்" எனும் அரியஞான கிரந்த கர்த்தாவுமாகிய
மஹான் - சாங்குசித்த சிவலிங்க நாயனாரின்

குருஸ்தோத்திரப்புஞ்சம்.

கணபதித்துதி - காப்பு.

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

—)✱(—

ஆனந்த வறிவிலுறு மகண்டமெய்ப் பொருளே !
வண்டரண்ட பகிரண்ட மவையுணிறை பவனே !
தானந்தவர் தனக்கிடர்செ யசுரன்வலி யடக்க
தந்தாவள வுருகொண்டு தரணியில்வந் தவனே
வானவர்கள் வணங்கிதொழ வரமருளுந் தேவே !
மஹான்சாங்கு சித்தசிவ லிங்கதேசிகன் சீர்
கூனமிலா துதவியருட் செய்யுமைங் கரனே
வுனதுமலர்ப் பதமெனது வுள்ளங்கொண் டனனே,

—0—

[வேறுதுதி.]

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

ஓங்காரத் துள்ளொளியாய் நின்றான் றன்னை
வுலகுயிரெ லாநடனம் புரிவான் றன்னை
மாங்கனிக்காய் வள்ளலடிச் சூழ்ந்தான் றன்னை
மாணவர்க்கு மானிடனாய் வருவான் றன்னை
ஆங்கார முள்ளொடுங்கச் செய்வான் றன்னை
யண்டரண்ட பகிரண்ட மாள்வான் றன்னை
தூங்காமற் றூங்குநிலைச் சொல்வான் றன்னைத்
தும்பிமுக னெம்பிரானைத் துதித்து வாழ்வாம். (௧)

ஆதியந்த மத்யமிலா வமலன் றன்னை
 அத்துவித தத்துவத்து ளமர்ந்தான் றன்னை
நீதிதயா பரலடிவாய் நின்றான் றன்னை
 நேமநிட்டை யற்றவிட நீங்கான் றன்னை
பாதிமதி யணிந்தசிவன் சேயன் றன்னை
 பதியெனவே நின்றிலகும் பரமன் றன்னை
சோதிமிகு ஞானநிலைத் தருவான் றன்னை
 தும்பிமுக னெம்பிரானைத் துதித்து வாழ்வாம். (௨)

அருவுருவா யற்புதமா யானான் றன்னை
 அவனவளா யலியுருவா யமர்ந்தான் றன்னை
கருதுமனங் கண்டுணர்ந் தருள்வான் றன்னைக்
 ககவுருவாய்க் கமண்டலங் கவிழ்த்தோன் றன்னை
குருவுருவாய் வந்தொருசொல் லுரைப்பான் றன்னை
 கூற்றுவனைக் குலைந்தோடச் செய்வான் றன்னை
சுருதிமுடி வாகிநிலை நிற்பான் றன்னை
 தும்பிமுக னெம்பிரானைத் துதித்து வாழ்வாம். (௩)

அத்திமுக பிரணவமா யமைந்தான் றன்னை
 ஆறுதாரத் தரசா ளப்பன் றன்னை
நித்தியமாய் நிராமயமாய் நின்றான் றன்னை
 நிரதிசயா னந்தமுடி வானான் றன்னை
புத்திநிறை புனிதகுணம் வாழ்வான் றன்னைப்
 பூதமெலா மோர்வடிவாய்ப் புறப்பான் றன்னை
சுத்தமுத்தித் தரவல்லத் துணைவன் றன்னைத்
 தும்பிமுக னெம்பிரானைத் துதித்து வாழ்வாம். (௪)

தேடரியப் பழம்பொருளாய்ச் சிறந்தான் றன்னை
 தேவருளந் திகழ்தேஜோ மயமாந் தன்னை
பாடலுடன் கலந்துநிற்கும் பண்போன் றன்னைப்
 ப்கரகர வுகரமக ரமுமாந் தன்னை
 டாதோர் நிலையொடுங்கி வுயர்வான் றன்னை
 வ்ச்சுவாச நிச்சுவாச முகப்பான் றன்னை
[illegible] சுடரொளியா யானான் றன்னைத்
[illegible] னெம்பிரானைத் துதித்து வாழ்வாம். (௫)

ஞானநெறி நயந்[illegible] நல்லோன் றன்னை
 நாதமய மரன[illegible] நாதன் றன்னை

... ஆவணக் காப்பகம் ...
183685
சென்னை 600 008

வானவர்கள் வணங்கியேத்தும் வல்லோன் றன்னை
மாமகத்வ மருட்செய்யு மாண்போன் றன்னை
ஆனந்த மனமிலகு மன்போன் றன்னை
ஆதிமறைச் சோதியா யமர்ந்தான் றன்னை
தோணுதச் சொற்சொரூப மானுன் றன்னைத்
தும்பிமுக னெம்பிரானைத் துதித்து வாழ்வாம். (௬)

—(*)—

குருஸ்துதிமாலை.

—(I)—

பன்னிருசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

—)*(—

ஓங்காரப் பிரணவத்தி னுளவறிந்தப் பெரியோர்க
ளோதுஞ்சொற்கே ளாதொதுங்கி
வுற்றூற்றுப் பார்த்தவரை யுதாசினங்கள் பேசிமன
மொட்டாரஞ் செய்தபாவி
போங்கால மறியாதுப் பொய்பேசி யலைந்துகெடும்
பொருளைக்கொண்ட பாவிவீண்
போதனையே கேட்டுகிதம் பொல்லாங்குறவு கொண்டு
பூரித்து நின்றபாவி
தீங்கது செழித்திலகுந் தீயர்களைச் சேர்ந்துசிவ
சேடர்களைச் செவியாப்பாவி
சித்தமுத்தர் மொழியோர்ந்து சிந்தைநிலை யறியாது
சிலைக்கொண் டலைந்தபாவி
சாங்குசித்த சிவலிங்க தேசிகனே சைவநெறி
சத்யமதின் பொருளுமுண்மை
சாங்குசித்து தனிலொடுங்குஞ் சத்தமதிற் சார்ந்தென்றுந்
தான்றுணைக சரணமருளே. (௧)

ஆங்காரங் கொண்டலைகி லன்னை தந்தை குருதெய்வத்தை
அனியாயஞ் செய்தபாவி
அடங்காது பேசியடி யவரைதூஷித்து பல
வலங்கோலஞ் செய்தபாவி
பாங்குயரும் பரனடியே பாடிடும் பாவலரைப்
பலகாலும் பழித்தபாவி
பாவகமே செய்துநாளும் பாழுடலை நம்பினோரைப்
பாடைமீது போகுமுன்னுள்

வாங்கிநிற்கும் வாசிநிறை வள்ளலடி போற்றமல்
மனவழிபோய் மயங்கிக்கெட்டு
மாறிவரும் பலசமய வார்த்தையினல் மதிகுலைந்து
மார்க்கம்விட் டகன்றபாவி
சாங்கசித்த சிவலிங்க தேசிகனே சைவநெறி
சத்யமதின் பொருளுமுண்மை
சாங்குசித்து தனிலொடுங்குஞ் சத்தமதிற் சார்ந்தென்றுந்
தான்றுணுக சரணமருளே. (௨)

நீங்காத சிந்தையுட னின்மலனைத் துதிப்பவர்மே
னிஷ்டூரஞ் சொன்னபாவி
நேசமற்ற வஞ்சநெஞ்சு கெறியகல குறியறியா
நின்றுலகில் மகிழ்ந்துநிதமும்
எங்கியேங்கி யிரவுபக லெண்ணெண்ணு கவலையதி
லேக்கங்கொண் டிருந்தபாவி
எமன்வந்து நேருங்கா லெடுத்தசென்ம மாற்றும
லேமாந்து போகும்பாவி
தேங்கா யிரண்டா யுடைத்ததுபோற் றெளிவுசொல்லி
தேற்றிவைக்குந் தேசிகனடி
சிரஞ்சாய்த்துக் கரங்கூப்பிச் சேவைசெய்யு நன்மனமுந்
தெரியாமற் றிகைத்தபாவி
சாங்குசித்த சிவலிங்க தேசிகனே சைவநெறி
சத்யமதின் பொருளுமுண்மை
சாங்குசித்து தனிலொடுங்குஞ் சத்தமதிற் சார்ந்தென்றுந்
தான்றுணுக சரணமருளே. (௩)

பூங்கா வனஞ்சென்று புதுமல ரெடுத்துலிங்க
பூசனைச்சேய் யாமலைந்துப்
பூதவழிப் போயலைந்து புண்ணியரைப் புறஞ்சொல்லி
போதைகஞ்சா குடித்தபாவி
ஓங்குமன முள்ளொடுங்க வொருமொழி யுபாயமதை
யோதினிலை யடையாதோங்கி
வுலகிற்பல வுருமாறி யுருண்டுருண்டு வந்துவந்து
வொழியாத சனனத்தொல்லை
தாங்கிசதா தூங்கிமனந் தமோறி யாணவத்தைச்
சுதமெனவே நம்பிநாளுந்
தீர்விபுகழ் கொண்டுகேலி தன்மையினற் புனிதமிகு
சற்சங்க மகன்றபாவி

சாங்கசித்த சிவலிங்க தேசிகனே சைவநெறி
சத்யமதின் பொருளுமுண்மை
சாங்குசித்து தனிலொடுங்குஞ் சத்தமதிற் சார்ந்தென்றன்
தான்றுணைக சரணமருளே. (௪)

மூங்கையிடம் செஞ்சினின்று மூக்குமுனை மும்மூல
முன்பினறி யாதபாவி
மூடனாய்க் கேடனாய் மூத்தோர்சொல் வார்த்தைதனை
முற்றமுண ராதபாவி
வேங்கையைப்போற் கண்சிவந்து வீரதீரப் பேதனத்தில்
வீராப்புக் கொண்டபாவி
விநாயகனை வணங்கியிம்மை விட்டகுறை தொட்டிடாமல்
வீண்செயலாற் பல்நோய்த்தொடர
வீங்கியுயிர் தஞ்சமுன்னே வேதபொரு ளுதமதின்
வித்தினிலை வியந்துகாண
விதந்தெரியா திருளுலகின் மிரண்டுகெடும் வெறியருடன்
விளையாடி னின்றபாவி
சாங்கசித்த சிவலிங்க தேசிகனே சைவநெறி
சத்யமதின் பொருளுமுண்மை
சாங்குசித்து தனிலொடுங்குஞ் சத்தமதிற் சார்ந்தென்றன்
தான்றுணைக சரணமருளே. (௫)

—)*(—

வருநகைவேண்டுமாலை.

தேவாரம்.

ஆதியே யுருவை மாற்றி யவனிவர் தாசா னுகி
நீதியே யுரைத்து நின்ற நித்ய நின்மல சொரூபா
சோதியே சுயம்ப்ர காசா சுத்தசை தன்ய தேவே
ஓதினேன் குருவே நின்று ளுவந்தருட் புரிந்தாள் வாயே. (௧)

ஆராதா ரத்தி லாடு மற்புதா னந்த ஞானம்
போாது வகத்து நின்ற பேசுமெய் சிவப்ர காசா!
தேராது சிறவ லுள்ளர் தேடியே நாடினேன் காண்
பாராதேன் குருவே நின்றுட் பணியருட் புரிந்தாள் வாயே் (௨)

குருவரு மனதுட் கொண்டோர்க் குணமதிற் கூடியபடி
இருவெளி யாகி நின்ற வெழுத்ததைப் பிரித்துச் சொல்லி

028:4117
N24
18868

மருவுரு வடையா காக்கு மாண்புயர் சைவனே யுன்
றிருவடி போற்றினேன் யான் தேசிகா வந்தான் வாயே; (௩)

வேதாந்த விளக் கொளியே விண்ணவ ரேத்துந் தேவே
பூதமும் பொறியு மாகிப் புந்தியு ணிறைந்தெங் காளும்
ஆதர வாயெல் லோர்க்கு மடிமுடி நிலைத் தொலிக்கும்
நாதயெங் குருவே நின்று ணம்பினேன் வந்தான் வாயே. (௪)

—0—

கிளிப்பத்து.

(௧) ஓம் ஓம் ஓம் ஓம் சவலிங்கமே
வயந்தருட் புரியுஞ் சிவலிங்கமே!
பாம்பணி யீசனூரு தனைமாற்றி
பாரிலெந் தனைக்காக்க வந்தவனே (ஓம்)

(௨) பாங்குயர் மலர்ப்பதம் பணிந்திடவே
தீங்குறு மனநிலைத் தெளிந்திடவே
வாக்கிடும் வாசியில் வாழ்ந்திடவே
ஓங்கார ப்ரணவத்தி லொடுங்கிடவே (ஓம்)

(௩) ஆதியந்த மில்லாப்பொரு ளறிந்திடவே
நீதி நெறிநிலையில் நின்றிடவே
சோதிமிகு ஞானவழி தோன்றிடவே
ஓதும் பிரணவத்தி லொடுங்கிடவே (ஓம்)

(௪) எல்லா மறிந்திட ரொழித்திடவே
தொல்லுல காசையைத் துறந்திடவே
நல்லா ருறவினை நாடிடவே
அல்லும்பகலு மறிவி லமர்ந்திடவே (ஓம்)

(௫) அம்புவி யருளதை யாய்ந்திடவே
நம்பினோர் நம்பனை நாடிடவே
வம்புறு மகங்கார மாய்ந்திடவே
தும்பி முகனடியிற் றூங்கிடவே (ஓம்)

(௬) சந்தத நிலைதனைச் சாற்றிடவே
மந்தியெனுங் குண மாய்ந்திடவே
அந்தரப் பொருளதை யாய்ந்திடவே
சொந்தமாய் நடுநிலையிற் றூங்கிடவே (ஓம்)

(எ) மூந்தி தவகுறி யறிந்திடவே
சந்தத மனநிலைச் சார்ந்திடவே
பந்த பாசவினைப் பறந்திடவே
உந்தி நடுநிலையி லுறங்கிடவே (ஓம்)

(அ) பூத வழியொன்றில் புகுந்திடவே
நாதாந்த குருவடி நாடிடவே
வேதாந்த விளக்கொளி விளங்கிடவே
ஓதரிய மொழியி லொலிங்கிடவே; (ஓம்)

—)✱(—

மனத்தொடுகிளர்த்தல்.

—(I)—

பண் - சீகாமரம்.

—(✱)—

ஆசித்தே யன்புட னனுதின மப்பனையே
நேசித் திரவுபக லீங்கா நினைவதனுள்
வாசிநிலை சம்பந்த வள்ளல் சிவலிங்க
தேசிகன் றிருவடியை தேடிவாழ் சிதைமனனே. (க)

பாசத்தான் வருமுன்னே பக்குவந் தானுணர்ந்து
பேசா திடமதனிற் பெட்புடன் றானமர்ந்து
மாசற்ற சம்பந்த வள்ளல் சிவலிங்க
ஆசான் றிருவடியை யண்டிவாழ் அலைமனனே. (உ)

மனமயங்கி மதிகெட்டு மயக்கத்தி லுறவாகி
சினந்தேடு மல்லலைச் சேர்ந்திடா தாதரிக்குந்
தினமேவிச் சம்பந்த தேசிகன் சிவலிங்க
வனமிகுந் திருவடியை மகிழ்ந்துவாழ் வன்மனனே. (ங)

எண்ணெழுத் திறையவனு மெல்லா நிறைந்திலகு
அண்ண றிருவுருவை யறிவா லறிந்துணர்ந்து
திண்ணிய சம்பந்த தேசிகன் சிவலிங்க
புண்ணியன் றிருவடியைப் புகழ்ந்துவாழ் புழுமனனே; (ச)

வந்துரை யீதென்று வண்மையெ லாந்தெளிந்து
முந்திவினை முடிக்க மோனவுரு வைப்போற்ற
வந்தஞான சம்பந்த வள்ளல் சிவலிங்க
எந்தை திருவடியை யிணங்கிவாழ் இடிமனனே. (ரு)

பந்த வினையறுத்துப் பாசமனைத்து நீக்கிச்
சொந்த மிடந்தெரிந்து சுழுமுனை தானோக்கிச்

சிந்தையொளி சம்பந்த தேசிகன் சிவலிங்க
விந்தை திருவடியை வேண்டிவாழ் வீண்மனனே. (௬)

அங்கிங் கெனாதபடி யாவினுஞ் சுப்ரதீபர்
தங்குந் தனிச்சுடரைத் தன்னிலைத் தானறிந்த
மங்காஞான சம்பந்த வள்ளல் சிவலிங்க
தங்கத் திருவடியைத் தாவிவாழ் தடிமனனே. (௭)

கருவுருவிற் கலந்தொளிருங் காரண காரியத்தின்
பெரும்பயன் றனைப்பேசி பேய்க்குணந் தானகற்றி
திருஞான சம்பந்த தேசிகன் சிவலிங்க
குருவடியிற் கலந்து கூடிவாழ் குறைமனனே. (௮)

பலகாலப் பூசனையிற் பயின்ற பக்குவத்தால்
மலமிகுந் துகணீக்கி மாசற்ற நிலையதனுள்
திலகமாஞ் சம்பந்த தேசிகன் சிவலிங்கன்
மலரடியை மறவாது வணங்கியே வாழ்மனனே. (௯)

எடுத்த சன்மமிதனு லினிவரு மறுமையையீ
தடுக்க நல்லறமதனிற் சார்ந்து சைவநெறியை
அடுத்துஞான சம்பந்த அண்ணல் சிவலிங்க
நடுநிலையோன் திருவடியை நாடிவாழ் கலிமனனே. (௰)

——)(——

வாழி. எண்சீர் விருத்தம்.

— o(—

கருணைமிகுக் கணபதி சங்கரனு மம்மை
கந்தன்வள்ளி தெய்வயானை கணக்கன் மயில்வேல்
திருஞானசம் பந்தரப்பர் சுந்தரர் தமிழ்
செப்பியநல் வாதவூரர்த் திருநீ றக்கம்
தெருணிறையுங் குருவடிவாஞ் சிவலிங்கதேவன்
திருவடியும் பக்த ரீட்டம் கவிஞர்சீர்சால்
திருக்காமணி யெனுமெம்யோகா நந்தன் தோத்ரம்
திருப்பணிக் குதவினருஞ் செகமும் வாழி.

—(●)—

மஹான் - சாங்குசித்த சிவலிங்க நாயனாரின்
குருதோத்திரப்புஞ்சம் ஸமாப்தம்
திருச்சிற்றம்பலம்.

—(S)—

18485

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

கட்டட கைங்கிரிய விண்ணப்பம்.

—(§)—

இதனால் சகல கனதனவான்களுக்குத் தெரிவிப்பதியாதெனில்:—

ஷெ மஹான் - சாங்கு சித்த சிவலிங்க நாயனாரின் சமாதி குரு பூஜா காலங்களில் சமயினத்தவர்கள் தங்குவதற்கு வசதியான இடமில்லாதது பெருங்குறைவாகவிருப்பதால் ஷெ சமாதியின் கிழக்குபாகத்தில் ஓர் கட்டடம் நியமிக்க உத்தேசித்திருப்பதால் இதனைக் கண்ணுறும் பரோபகார புண்ணிய சீலர்கள் தங்களாலியன்றப் பொருளுதவிசெய்து ஷெ சிவ புண்ணியத்தைப் பூர்த்திசெய்யும்படி கோருகின்றனன்.

இங்ஙனம்

அடியார்க்கடிமை

மஹான் - சுவாமி. நிரதிசயானந்தா மௌனகுரு அவர்களின்

அனுமதிபெற்றுள்ள

ச. பெ. திருக்காமணிப் பிள்ளையென்று வழங்கும்

ஸ்ரீ சிவயோகானந்த தேசிகர்.

வேளானத்தேவனும்பேட்டை, சென்னை.

—(§)—

கைங்கிரியக்காரர்கள் நாமதேயம்.

வேளாளத்தேவனும்பேட்டை
பிரகாரப்படி:—

M. நடேசன் பிள்ளை
J. களஞ்சியம் பிள்ளை
ச கிஷ்டன் பிள்ளை
P. எல்லப்பன் பிள்ளை
P. ஐயாக்கண்ணு பிள்ளை
C. நடேசன் பிள்ளை
A. சண்முகம் பிள்ளை
M. எல்லப்பன் பிள்ளை
P. பொன்னரங்கம் பிள்ளை
P. ஆலை பிள்ளை
R. ஆலை பிள்ளை
T. M. இராமசாமி பிள்ளை
M. தங்கவேலு பிள்ளை
R. ஞானம் பிள்ளை
P. சிவஞானம் பிள்ளை
R. நடேசன் பிள்ளை
A. முனிசாமி பிள்ளை
R. சுப்பிரமணியம் பிள்ளை
P. இராகுவேலு பிள்ளை
A. நாகன் பிள்ளை
V. சின்னராகு பிள்ளை
C. ஆலை பிள்ளை
M. பாளையம் பிள்ளை
P. நடேசன் பிள்ளை
P. முனிசாமி பிள்ளை
A. நாராயணசாமி பிள்ளை
A. M. டேவிட் பிள்ளை (சிம்லா)
A. தம்புசாமி பிள்ளை
S. P. T. சன்மார்க்கம் பிள்ளை
R. வேளாங்கண்ணி பிள்ளை

சாலைதேவனும்பேட்டை

V. A. ஆரோக்கியசாமி பிள்ளை

பெங்களூர் ஜில்லா

K. V. குப்புசாமி பிள்ளை